## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன்– 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்கள்–11 மாவட்டங்களில் புதியதாக துவங்குதல்–தன்னார்வ தொண்டு நிறுவனங்களை தெரிவு செய்தல்– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.18

நாள்:02–03–2015
ஜய, மாசி 18,
திருவள்ளுவர் ஆண்டு 2046
படிக்க:-

1. அரசாணை(நிலை) எண்.84, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 10.12.14.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.3718/ மா.தி.ந.2.1/2014, நாள் 9.12.14.

--------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற் பயிற்சியுடன் கூடிய ஆண்களுக்கான ஆறு இல்லங்களை, தருமபுரி, கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் திருவாரூர் மாவட்டங்களிலும், 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற்பயிற்சியுடன் கூடிய பெண்களுக்கான ஐந்து இல்லங்களை விருதுநகர், அரியலூர், திருப்பூர், நீலகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களிலும், 01.12.2014 முதல் துவக்கிட அனுமதியும் மற்றும் இதற்கென, ஒரு இல்லத்திற்கு நான்கு மாதங்களுக்கான செலவினத் தொகையாக ரூ.3,55,600/– வீதம் 11 இல்லங்களுக்கு மொத்தம் ரூ.39,11,600/– நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், இத்திட்டத்தினை 2014–15 ஆம் நிதியாண்டில் செயல்படுத்திட, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களினால் பரிந்துரை செய்துள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்களை பட்டியலிட்டு , அந்நிறுவனங்கள் மூலம் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான 11 இல்லங்களை நடத்துவதற்கு ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் பரிந்துரையுடன் கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, 2014–15 ஆம் நிதியாண்டில், 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான ஐந்து இல்லங்கள் மற்றும் ஆண்களுக்கான ஆறு இல்லங்கள் என மொத்தம் 11

இல்லங்களை பின்வரும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலம் செயல்படுத்திட ஆணையிடுகிறது:—

**மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான ஐந்து இல்லங்கள்**

| வ.எண். | மாவட்டம் | தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | விருதுநகர் | சப்தகிரி மறுவாழ்வு அறக்கட்டளை நிறுவனம்,<br>54, இராமமூர்த்தி ரோடு,<br>விருதுகநகர் மாவட்டம். |
| 2. | அரியலூர் | ரீடு தொண்டு நிறுவனம்,<br>அன்பகம் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளி,<br>சக்தி வினாயகர் கோவில் தெரு, விளந்தை, ஆண்டிமடம்,<br>அரியலூர் மாவட்டம். |
| 3. | திருப்பூர் | அன்னாள் சிறப்புப் பள்ளி,<br>அன்னாள் மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு மையம்,<br>கரட்டுப்புதூர், பெருந்தொழுவு அஞ்சல், பொல்லிக்காளிபாளையம்<br>(வழி), திருப்பூர் மாவட்டம். |
| 4. | நீலகிரி | நாயல்ஸ் கோன் அறக்கட்டளை, எண்.3/10, 77 அ, புத்தூர் வயல் ரோடு, கம்மாத்தி, ஸ்ரீமதுரை பஞ்சாயத்து, கூடலூர், நீலகிரி மாவட்டம். |
| 5. | விழுப்புரம் | ஹரிக்ஷா மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி,<br>அவலூர்பேட்டை,<br>மேல்மலையனூர் அஞ்சல்,<br>விழுப்புரம் மாவட்டம். |

**14வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான ஆறு இல்லங்கள்**

| வ.எண். | மாவட்டம் | தன்னார்வ தொண்டு நிறுவனத் தின் பெயர் |
|---|---|---|
| 1. | தருமபுரி | மெர்சி ஹோம் மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லம், சோகத்தூர் கூட்ரோடு, தருமபுரி மாவட்டம். |
| 2. | கரூர் | சக்தி வயதடைந்த மனவளர்ச்சி குன்றியோருக்கான பயிற்சி இல்லம்,<br>சணப்பிரட்டி அக்ரஹாரம்,<br>தொழிற்பேட்டை, கரூர்—639 004. |
| 3. | நாகப்பட்டினம் | கிறிஸ்து ராஜா மன வளர்ச்சி குன்றியோருக்கான இல்லம்,<br>கருணை இல்லம், வேளாங்கண்ணி, கீழ்வேளூர் தாலுகா,<br>நாகப்பட்டினம் மாவட்டம். |
| 4. | பெரம்பலூர் | ரீடு தொண்டு நிறுவனம்,<br>அன்பகம் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான சிறப்புப்பள்ளி,<br>புதிய காரலனி பள்ளிவாசல் இரண்டாவது குறுக்கு தெரு,<br>துறைமங்கலம், பெரம்பலூர் மாவட்டம். |
| 5. | புதுக்கோட்டை | ரெனேசான்ஸ் நிறுவனம்,<br>மலர்ச்சி மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி, களமாவூர்<br>கிராமம் மற்றும் அஞ்சல், கீரனூர் வழி, புதுக்கோட்டை மாவட்டம். |

| | | |
|---|---|---|
| 6. | திருவாரூர் | மனோலயம் ஹெல்த் கேர் டிரஸ்ட்,<br>தமிழர் தெரு, மேலபனங்காட்டான்குடி, பூதமங்கலம் வட்டம்,<br>திருவாரூர் மாவட்டம். |

(ஆளுநரின் ஆணைப்படி )

பொ. சிவசங்கரன்,
முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை—78.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்மந்தப்பட்ட மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை—35.
தலைமைக் கணக்காயர், சென்னை—18.
தலைமைக் கணக்காயர், சென்னை— 18. (பெயரில்)

**நகல்:—**
மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை—9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர்,சென்னை—9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.